[2022] 3 எஸ்.சி.ஆர். 813

சுரேஷ் மகாஜன்

-எதிர்-

மத்தியப்பிரதேச மாநில அரசு மற்றும் ஒருவர்

(நீதிப்பேராணை மனு (உ) எண்.278/2022)

மே 10, 2022

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எம்.கான்வில்கர்,

மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் எஸ். ஓகா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சி.டி. ரவிக்குமார்

தேர்தல் சட்டங்கள்:

மத்திய பிரதேச நகராட்சிகள் சட்டம், 1956 - பிரிவு 10(1) - மத்திய பிரதேச பஞ்சாயத் ராஜ் அவம் கிராம் ஸ்வராஜ் அதினியம், 1993 - பிரிவுகள் 12, 23 மற்றும் 30 மத்திய பிரதேச நகராட்சிகள் சட்டம், 1961 - பிரிவு 29 - பெருவாரியான உள்ளாட்சி மன்றங்களில் தேர்தல் நடத்தாதது குறித்த விஷயம் - மும்முறை தேர்தல் நடைமுறை மாநில அரசால் நிறைவேற்றப்படாததால், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு மாநில தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்படவில்லை - எல்லை வரையறுத்தல் அல்லது வார்டுகள் பிரித்தல் ஆகிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்வதால் தேர்தல் நடத்த முடியாது -

முடிவு: சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களை அமைக்க தேர்தல் நடத்தும்பொருட்டு, தொடர்புடைய மாநில சட்டமன்றங்களின் வகையங்கள் உள்பட அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 243-ஈ மற்றும் 243-யு-ஐ கருத்தில் கொண்டு தாமதிக்க முடியாது - உள்ளாட்சி மன்றத்தின் காலம் முடிவதற்கு முன் உள்ளாட்சி மன்றம் கலைக்கப்படஅவசியமேற்பட்டால் மட்டுமே தாமதம் அனுமதிக்கப்படலாம் - எனவே, வெளியேறும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றத்தின் 5 ஆண்டுகாலம் முடியுமுன்னரே, புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் உள்ளாட்சி மன்றம் அனைத்து உள்ளாட்சி மன்றத்திலும் நிறுவப்பட்டுள்ளனவா என்பதை தொடர்புடைய அனைவரும் உறுதி செய்யவேண்டும், மாநிலத்தில் நிருவாகியை நியமிப்பதனால் ஆட்சி காலம் 6 மதத்திற்கு மேல் தொடரக்கூடாது - இந்த அரசமைப்பு கட்டளையை மீறத்தகாதது - குறிப்பிடப்பெற்ற காலக்கெடுவுக்குள் தேர்தல் அட்டவணையை வெளியிடாததற்கு, உள்ளாட்சி மன்றங்களில் அமைக்கப்பட உள்ள வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பு, வார்டுகளை வரையறுத்தல் அல்லது உருவாக்குதல் ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க தொடர்புடைய இயற்றப்பட்ட சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பது உறுதியான காரணமாக இருக்க முடியாது - எல்லை வரையறை என்பது தொடர் செயலாகும் மற்றும் அது முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட வேண்டும் - எல்லை வரையறையானது வெளியேறும் உள்ளாட்சி

மன்றத்தின் ஆட்சி காலமான 5 ஆண்டுகளுக்கு முன்னரே, நிறைவேற்றப்படாவிட்டால் அதன் செயல்பாடோ அல்லது மும்முறை தேர்தல் நடைமுறையோ நிறுத்திவைக்கலாம் - எனவே, மாநில தேர்தல் ஆணையம் மும்முறை தேர்தல் நடத்த காத்திராமல், தேர்தல் நடத்துவதற்கான காலம் வரும்போது மேலும் தேர்தல் அட்டவணையை வெளியிடுமாறு உத்தரவிடப்படுகிறது - மும்முறை தேர்தல் நடைமுறை நிறைவடையாதவரை, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான ஒதுக்கீடு ஏதும் வழங்கப்படக்கூடாது - தேர்தல் அட்டவணை வெளியிடுவதற்கு முன் மும்முறை தேர்தல் நடைமுறை முடிக்கப்படாவிட்டால், பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களைத் தவிர பொதுப் பிரிவினருக்காக அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும் - எல்லை வரையறை செய்தல் பணி அல்லது மும்முறை தேர்தல் நடைமுறை எப்பொழுது நிறைவடைகிறதோ அதன் பின்னர் நடத்தப்படும் தேர்தல்கள், அத்தகைய ஒதுக்கீட்டிற்கு இணங்க வேண்டும்.

விகாஸ் கிஷன்ராவ் காவாலி -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு (2021) 6 **எஸ்.சி.சி.** 73; கிஷன்சிங் தோமர் -எதிர்- அகமதாபாத் நகர முனிசிபல் கார்பொரேஷன் மற்றும் பலர் (2006) 8 **எஸ்.சி.சி.** 352 : [2006] 7 **சப். எஸ்.சி.ஆர்.** 454; கே. கிருஷ்ண மூர்த்தி (டி ஆர்)

மற்றும் பலர் -எதிர்- இந்திய ஒன்றியம் மற்றும் ஒருவர் (2010) 7 எஸ்.சி.சி. 202 : [2010] 6 எஸ்.சி.ஆர். 972 - குறித்துக்காட்டப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(2021) 6 எஸ்.சி.சி. 73	குறிப்பிடப்பட்டது	பத்தி 5
[2006] 7 சப். எஸ்.சி.ஆர். 454	குறிப்பிடப்பட்டது	பத்தி 6
[2010] 6 எஸ்.சி.ஆர். 972	குறிப்பிடப்பட்டது	பத்தி 25

உரிமையியல் முதலேற்பு அதிகார வரம்பு : நீதிப்பேராணை (உரிமையியல்) எண்.278/2022.

அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 32-ன் கீழ்

கவுதம் அவஸ்தி, ஆயுஷ் சவுத்ரி, தேவன்ஸு யாதவ், சமீர் பாண்டே, வருண் தாகூர், பிரஜேஷ் பாண்டே, அனிலேண்டர் கே. பாண்டே - மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

துஷார் மேத்தா, அரசு தலைமை வழக்குரைஞர், கே.எம். நட்ராஜ், அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர், சவுரப் மிஸ்ரா, டி.எஸ்.பார்மர், பாரத் சிங், கூடுதல் மாநில அரசு தலைமை வழக்குரைஞர்கள், பி.எஸ். பத்வாலியா, மூத்த வழக்குரைஞர், ஹர்மீத் சிங் ரூப்ரா, மனிஷ் யாதவ், செல்வி. இந்திரா பாக்கர், மிரினால் கோபால் எல்கெர், ஷரத் நம்பியாரா, விநாயக் சர்மா, சித்தார்த் சேத், கார்த்திக் சேத், தி/ள். சேம்பேர்ஸ் ஆஃப் கார்த்திக் சேத், நிகில் ஜெயின் - எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எம்.கான்வில்கர் அவர்களால் பகரப்பட்டது.

1. மாநில தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்தையும் தற்சார்புரிமையையும் பறிப்பதாகவும், மத்தியபிரதேச நகராட்சி சட்டம் பிரிவு 10(1), மத்திய பிரதேச பஞ்சாயத் ராஜ் அவம் கிராம் ஸ்வராஜ் அதினியம், 1993 பிரிவுகள் 12, 23 மற்றும் 30, மத்தியபிரதேச நகராட்சி சட்டம், 1961, பிரிவு 29 ஆகியவற்றின் செல்லுந்தன்மை தன்னிச்சையானதாக இருப்பதால் அதனை எதிர்த்து இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

2. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் அமைக்கப்படக்கூடிய வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் அளவை தீர்மானிக்க அவ்வப்போது மேற்படி சட்ட திருத்தங்கள் மூலம் அறிவிக்கை வெளியிடும்படி மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. சி.அ.ம. (உ) எண்.19756/2021-இல் 04.05.2022 தேதியன்று வழங்கப்பட்ட எங்களது உத்தரவுகளிலும் மற்றும் தொடர்புடைய வழக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சம்பந்தப்பட்ட சட்டங்களின் திருத்தங்களுக்குப்பின், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட அதே போன்ற நிலை ஏற்பட்டுள்ளது.

3. தற்போதைய நீதிப்பேராணை மனுவில் வலியுறுத்தப்பட்ட காரணங்கள், மகாராஷ்டிரா மாநிலம் குறித்து மேற்சொன்ன வழக்கில் உள்ளடக்கியுள்ள பிரச்சனைகள் போன்று உள்ளது. 04.05.2022 தேதியிட்ட

உத்தரவில், தரப்பினர்களால் எழுப்பப்பட்ட வினாக்களை ஆழ்ந்து ஆராய வேண்டியது அவசியமாகிறது, எனவே, வழக்கை மீண்டும் விசாரிக்குப்படி உத்தரவிடப்படுகிறது என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. மேசொன்ன வழக்குகளுடன் சேர்த்து இந்த வழக்கையும் விசாரிப்பது உகந்தது. அதன்படி, நாங்கள் உத்தரவிடுகிறோம்.

4. மத்தியபிரதேச மாநிலத்தில் உள்ள பெருவாரியான உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தாத விஷயம் தொடர்பாக, திரும்பிப் பார்க்கையில் அதில் வித்தியாசம் ஏதும் இல்லை. உண்மையில், இந்த மாநிலத்தில் உள்ள எண்ணிக்கையானது அதிர்ச்சியூட்டும் வகையில் உள்ளது. மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையத்தின் வழக்குரைஞர் இந்நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த விளக்க அட்டவணை, 2019-2020-லிருந்து சுமார் 321 நகர உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடக்கவில்லை எனக் குறிப்பிடுகிறது. மேலும், இதுவரை தேர்தல் நடத்தப்படாத உள்ளாட்சி மன்றங்களின் அடிமட்ட அளவு (ஊரக உள்ளாட்சி மன்றங்கள்) எண்ணிக்கையானது ஏறக்குறைய 23,073-ஆக உள்ளது.

5. விகாஸ் கிஷன்ராவ் காவாலி -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு (2021) 6 எஸ்.சி.சி. 73, என்ற வழக்கின் தீர்ப்புரையில் கூறப்பட்டவாறு, மாநில அரசு மும்முறை தேர்தல் நடைமுறையை இதுவரை நிறைவேற்றவில்லை என்ற மகாராஷ்டிரா மாநில அரசின் வழக்கை போன்ற அதே காரணத்திற்காக தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அதன் விளைவாக, இதர பிற்படுத்தப்பட்ட

வகுப்பினருக்கான (இ.பி.வ.) ஒதுக்கீடு மாநில தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்படவில்லை. 03.03.2022 தேதியிடப்பட்ட உத்தரவு உட்பட பின்னிட்ட உத்தரவுகள் மூலம் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கட்டாய உத்தரவாகும். இது தொடர்பாக தொடர்புடைய மாநிலங்களவையின் வகையங்கள் உட்பட அரசமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 243-ஈ மற்றும் 243-யு ஆகியவற்றின் வலியுறுத்தலுக்கு இணங்க, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பில் புதிய தேர்வுக்குழுவை நியமிக்க தேர்தல் நடத்த வேண்டும் என்பதை தாமதிக்க முடியாது என இந்நீதிமன்றம் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

6. ஒரு விதமான கால இடைவெளியான சூழ்நிலையானது, உள்ளாட்சி மன்றங்களின் காலம் நிறைவடைவதற்கு முன்பு உள்ளாட்சி மன்றத்தை கலைத்த பின்னரே அதை அனுமதிக்க முடியும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் அதன் முதல் கூட்டத்திலிருந்து 5 (ஐந்து) ஆண்டுகளுக்கு என்றும் "அதற்கு மேல் இல்லை" என்று வகுமுறைக்கூறு 243-ஈ-ம் அதேபோல் வகுமுறைக்கூறு 243-யு-ம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வில் கிஷன்சிங் தோமர் -எதிர்- அஹமதாபாத் நகர முனிசிபல் கார்பொரேஷன் மற்றும் பலர், (2006) 8 எஸ்.சி.சி. 352 (குறிப்பாக பத்திகள் 12 முதல் 14 மற்றும் 22 முதல் 28) என்ற வழக்கில் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

7. எனவே, வெளியேறும் தேர்தெடுக்கப்பட்ட அமைப்பின் 5 (ஐந்து) ஆண்டு கால அவகாசம் முடிவடையும் முன்னர் புதிதாகத் தேர்தெடுக்கப்பட்ட

அமைப்பு அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலும் நிறுவப்பட்டுள்ளதை தொடர்புடையவர்கள் உறுதி செய்ய வேண்டும். ஐந்து ஆண்டு கால நிறைவிற்கு முன்னர் உள்ளாட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டால் கூட, மாநிலத்தால் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு, தொடர்புடைய மாநிலங்களவையின் வகையங்களுக்கு ஏற்ப அந்த ஆட்சிக்காலம் 6 (ஆறு) மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்படக்கூடாது.

8. இந்த அரசமைப்பு கட்டளை மீறத்தகாதது. இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 142-ன் கீழ் மாநில தேர்தல் ஆணையமோ அல்லது அரசோ அல்லது மாநில சட்ட மன்றமோ, இந்நீதிமன்றமோ இதற்கு மாறாக விதிவிலக்கு அளிக்க முடியாது.

9. அத்தகைய அரசமைப்பு கட்டளை இருந்த போதிலும், தற்போது மத்தியப்பிரதேச மாநிலத்தின் உண்மை நிலையாதெனில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக 23,263 உள்ளாட்சி மன்றங்கள், தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இன்றி இயங்கி வருகின்றன. இது சட்டத்தின் ஆட்சியை முறிக்கும் செயலாகும், மேலும் இது போன்ற உள்ளாட்சி அமைப்பில் உள்ள செயல்பாட்டின் அடிப்படையில் அரசமைப்பு கட்டளையின் தெளிவான மீறுகையாகும், அதை அனுமதிக்க முடியாது.

10. மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட வேண்டிய வார்டுகளின் எண்ணிக்கையையும், அளவையும் தீர்மானிக்க மாநில அரசுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் மாநில சட்டசபை சம்பந்தப்பட்ட சட்டத்தில்

திருத்தங்கள் செய்திருப்பது அரசமைப்பிலும், சட்டமன்றத்தில் அது தொடர்பாக இயற்றப்பட்ட சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள கெடுவிற்குள் தேர்தல் அட்டவணை திட்டத்தை அறிவிக்காததற்கு உறுதியான அல்லது முறையான காரணியாக இருக்க முடியாது.

11. எவ்வாறிருந்தாலும், உரிய நேரத்தில் தேர்தல் அட்டவணையை அறிவிக்கை செய்வது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு 5 (ஐந்து) ஆண்டுகாலம் முடிந்து வெளியேறு முன்னர் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பை நிறுவும் அரசமைப்பு கடமையை நிறைவேற்றாதிருக்க மாநில தேர்தல் ஆணையத்திற்கு குறைவான அமைப்பு எதுவும் கூறும் எல்லை வரையறுத்தல் அல்லது வார்டு அமைத்தல் என்ற நடைமுறை செயல்பாடுகளை ஒரு நியாயமான காரணமாகக் கூறமுடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரியால் மேற்கொள்ளப்படும் தொடர் நடவடிக்கை, எல்லை வரையறை செய்வதை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு நிர்வாகத்தின் அதிகாரத்தை ஏற்று, எவ்வித இடையூறுமின்றி, தொடர் ஆளுமையுடன் (அதன் மூலம் மக்களுக்காக, மக்களால், மக்கள் அரசு கொள்கையை நிலைநிறுத்தி) இயங்கும் வகையில் உரிய நேரத்தில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திற்கான தேர்தல்கள் அறிவிக்கை செய்யப்படுவதை உறுதி செய்து மிக முன்னரே துவக்கப்பட்ட வேண்டும். வேறு வார்த்தைகளால் கூறினால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் அட்டவணை வெளியிடுவதை தாமதப்படுத்துவதற்கு,

மேற்சொன்ன சட்டங்களில் சட்ட திருத்தத்தை மேற்கொள்வதை ஒரு நியாயமான காரணமாகக் கட்ட முடியாது.

12. எனவே, இடைக்கால உத்தரவின் மூலம் மாநில தேர்தல் ஆணையத்திற்கு 5 (ஐந்து) ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடைந்தாலோ அல்லது எதிர்ப்புக்குள்ளான சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரோ தேர்தல் நடைபெறத் தொடங்கிய பொது, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் குறிப்பிடப்பட்ட வரையறைக்கு ஏற்ப வார்டுகளில் அடிப்படையில் எந்தவொரு தாமதமும் இன்றி தேர்தல் அட்டவணை திட்டத்தை வெளியிடுமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம். அந்த கருத்தியல் அடிப்படையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு வழங்குவதற்காக மாநில அரசால் மும்முறை தேர்தலை நடத்த காத்திருக்காமல் எங்கெல்லாம் தேர்தல் நடக்க வேண்டுமோ அல்லது எதிர்காலத்தில் நடக்க வேண்டுமோ அந்த சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்து விதிவிலக்கு ஏதுமின்றி மாநில தேர்தல் ஆணையம் செயல்பட வேண்டும். ஆட்சி காலம் முடிவடைவதற்கு முன் அனுமதிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் கலைக்கப்பட்டது தவிர உள்ளாட்சி அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் முறையாக ஆட்சி செய்யப்பட வேண்டும் என்பது அரசமைப்பு கட்டளையுடன் ஒத்துப்போகும் விதமாக அத்தகைய உத்தரவு பொதுமக்களின் நலன் காக்க, நீதியின் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை.

13. மும்முறை தேர்வு நடைமுறை "அனைத்து அம்சங்களிலும்" மாநில அரசால் நிறைவேற்றப்படும் வரை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக எந்த ஒதுக்கீடும் செய்யப்படக்கூடாது; மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அட்டவணை வெளியிடும் முன்னர் அந்த செயல் முடிக்கப்படாது போனால்,காலி இடங்கள் (அரசமைப்பில் கோரப்பட்டுள்ளவாறு பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களைத் தவிர), மீதமுள்ள இடங்கள் பொதுப் பிரிவினருக்கு அறிவிக்கப்படவேண்டும்.

14. சில உள்ளாட்சி அமைப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மக்கள் தொகை 50 சதவிகிதம் அதிகமாக உள்ளது என்றும், அந்த காரணத்திற்காக, ஆணையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விழுக்காடு என்பது பழமையான அணுகுமுறை மற்றும் அது எதிர்காலத்தில் சரியாக கையாளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அரசமைப்பு கட்டளையை புறக்கணிப்பதற்கு அது அடிப்படையாக அமையாது மற்றும் இந்நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்ட மும்முறை தேர்வு நடைமுறை பின்பற்றப்பட அவசியமாகிறது. உள்ளாட்சி மன்றங்களின் ஆளுமையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பங்கேற்பதற்கு ஆதரவு கோரும் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு சிகேத பின்னர் எல்லா பொதுப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவரை நியமிக்க

சுதந்திரம் உண்டு. பரிசீலினைக்குரிய மேல்முறையீட்டு மனு தொடர்பாக நாங்கள் மேலும் விவாதிக்க விரும்பவில்லை.

15. எல்லைகளை வரையறை செய்யும் நடைமுறைகள் மற்றும்/அல்லது மும்முறை தேர்வு நிறைவேற்றுதல் ஆகியவை தொடர்ச்சியானது, சிக்கல் நிறைந்தது, நேரம் அதிகம் எடுப்பது மற்றும் அதுபோல் காலவரம்பற்றது (வெளியே செல்லும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் முடிவு காலத்துடன் நேரடியாகத் தொடர்புடையது) என்பதை நாங்கள் மீண்டும் வெளியுறுத்துகிறோம். ஆட்சி காலம் முடிவடைந்து வெளியேறும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பை ஏற்படுத்திட தேர்தல் நடத்துவது என்பது அரசியலமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களில் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாநிலத் தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட தேர்தல் அட்டவணை, அது எதிர்காலத்தில் நிரப்பப்பட வேண்டியதாக இருக்கும்போது முன்னவர் நிறுத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை.

16. எல்லை வரையறுத்தல் பணி அல்லது மும்முறை தேர்வு நடைமுறை, நேர்வுக்கேற்ப முடிக்கப்பட்டபின், நடத்தப்பட்ட தேர்தல்கள் அத்தகைய ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

17. மாநில ஆட்சி அதிகாரத்தால் வலியுறுத்தப்பட்ட காரணங்களை ஏற்றுக் கொள்வதாயிருந்தால், எந்த தேர்தல் ஆணையமாக இருந்தாலும்-அது

மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையமாக இருந்தாலும்-உரிய நேரத்தில் தேர்தல் அட்டவணையை வெளியிட்டு, வெளியேறும் தேர்வு அமைப்பின் 5 (ஐந்து) ஆண்டு காலம் முடிவதற்கு முன்பாக புதிதாகத் தேர்ந்தெடுத்த அமைப்பை நிறுவுவதை உறுதி செய்வது மிகக் கடினமானதாக இருக்கும். அது அரசமைப்பு கட்டளையைத் தோற்கடித்துவிடும் மற்றும் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தடையற்ற உள்ளாட்சி அமைப்புக் கொள்கைக்கு எதிராகப் போய்விடும்.

18. வேறுவகையில் கூறினால், எல்லை வரையறை செயல்பாடு அல்லது மும்முறை தேர்தல் நடைமுறை என்பது நேர்விற்கேற்ப சொல்லப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு அளிக்கப்பட்ட காலக்கெடு உட்பட, வெளியேறும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஐந்து ஆண்டுகாலம் முடிவதற்குள் முடிக்கப்படவில்லையென்றால் அது நிறுத்தி வைக்கப்பட்டாலும் அதன் காரணத்தின்பேரில் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அட்டவணை வெளியிடுவது தாமதப்படுத்தப்படக் கூடாது. அது வெளியேறும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஆட்சிக்காலமான 5 (ஐந்து) ஆண்டுகள் நிறைவடைவதன் பேரில் தவிர்க்க முடியாத தற்காலிக இடைவெளியை ஏற்படுத்திவிடும். பொறுப்பில் உள்ள அனைவரும் அத்தகைய நிகழ்வை காரண காரிய முறையில், அது மாநில தேர்தல் ஆணையத்தின்

அரசமைப்பு பொறுப்பு மட்டுமின்றி, நீதிமன்றங்கள் உட்பட மாநில அரசின் பொறுப்புமாகும்.

19. மேற்சொன்னவற்றை கருத்திற்கொண்டு, "உண்மையில்" சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திற்கு தேர்தல் நடக்க வேண்டிய உரிய நாள் அல்லது தற்போதுள்ள நடவடிக்கையில் இந்நீதிமன்றத்தின் முன்பாக எதிர்க்கப்பட்ட திருத்தச் சட்டம் (எதிர்ப்புக்குள்ளான) நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, அந்த நாளில் வார்டுகளை வரையறுத்தல்/உருவாக்குதல் குறித்து வார்டு மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பாக தேர்தல் அட்டவணை வழங்கி கருத்தியல் அடிப்படையில் செயல்படுத்தவும், மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட எங்களுக்கு எவ்வித தயக்கமுமில்லை.

20. இன்றிலிருந்து இரு வாரங்களுக்கு மிகாமல் மாநில தேர்தல் ஆணையம் செயலாற்ற வேண்டும். இந்த உத்தரவின் வரையறைகளின்படி, வேலையை மேற்கொள்ள மாநில தேர்தல் ஆணையத்திற்கு தேவையான உதவியை மாநில அரசு அளிக்க வேண்டும்.

21. வாதுரையின்போது, இந்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, மும்முறை தேர்தல் நடைமுறையின் முதல்படியாக, மாநில அரசால் அமைக்கப்பட்ட பிறப்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட 05.05.2022 தேதியிட்ட முதல் அறிக்கைக்கு எங்கள் கவனம் ஈர்க்கப்பட்டது. இருப்பினும்,

தற்போதைய நடவடிக்கையில், அந்த அறிக்கையை பரிசீலிக்கவும் அல்லது விமர்சனம் செய்யவும் நாங்கள் விரும்பவில்லை.

22. சொல்லப்பட்ட ஆணையத்தின் முதல் அறிக்கை தயார் பண்ணப்பட்டதாலேயே, மும்முறை தேர்தல் நடைமுறை முழுமையாக நிறைவேற்றப்பட்டதாக கருதப்படக்கூடாது. அது ஒருவகையில் பார்த்தால் துவக்க நிலை ஆகும், மேலும் உள்ளாட்சி மன்றம் வாரியாக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்ய அது மாநில அரசின் இறுதி விளம்புகைக்கான நடவடிக்கை மட்டுமே ஆகும்.

23. 05.05.2022 தேதியிட்ட மாநில அரசால் நியமிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையத்தால் முதல் அறிக்கை தயார் செய்யப்பட்டதன் பேரில், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கப்பட்ட காலி இடங்களை அறிவிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ள மாநில அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை கற்றறிந்த அரசு தலைமை வழக்குரைஞர் திரு. துஷார் மேத்தா வலியுறுத்தி கூறினார். முதலில், மேற்படி விகாஸ் கிஷன்ராவ் காவாலி என்ற வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மெய்க்கருத்தின்படி, அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஆணையத்தால் (ஒப்படைக்கப்பட்ட) அந்தப் பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. உள்ளாட்சி மன்றம் வாரியாக செய்யப்பட வேண்டிய பணியை, எங்களிடம் தரப்பட்ட

அறிக்கையின்படி ஈடுபடவில்லை. எனவே, தற்போதைய வழக்கில் இந்த அறிக்கையால் பயன் இல்லை.

24. வேறு வார்த்தைகளில் சொன்னால், அனுபவ அறிவுத் தரவுகளின் முரணற்ற செயல்பட்டால், ஆய்வுக்குப்பின், உள்ளாட்சி மன்றம் வாரியாக இதர பிறப்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் எண்ணிக்கை குறித்து ஆணையம் பரிந்துரை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையில், அந்த செயல்பாடு ஆணையத்தால் மேற்கொள்ளப்படவில்லை. மாநில அரசு, "சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் அத்தகைய ஒதுக்கீட்டுக்கான நீட்சியை உறுதி செய்ய தனி அமைப்பாக உருவாக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகளின்படியே செயல்படமுடியும்.

25. இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு கே. கிருஷ்ண மூர்த்தி (டி ஆர்) மற்றும் பலர் -எதிர்- இந்திய ஒன்றியம் மற்றும் ஒருவர் (2010) 7 எஸ்.சி.சி. 202 [பத்தி 82 (i)]-இல் குறிப்பிட்டவாறு உயர்கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பு ஆகியவற்றிலிருந்து உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யும் தன்மை மற்றும் காரணம் மாறுபட்டது என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் குறித்துக் கொள்ளவேண்டும்.

26. மேலே சொல்லப்பட்டவாறு, மாநில தேர்தல் ஆணையம் இனி காத்திருக்க வேண்டாம், ஆனால் உள்ளாட்சி அமைப்புகளான தேர்தல்(கள்) உரிய நேரத்தில் நடக்க தேர்தல் அட்டவணையை வெளியிடலாம்; மற்றும் தற்போதைய

வழக்கில் மேற்சொன்னவாறு, தற்போது மத்தியபிரதேச மாநிலம் முழுவதும் 23,263 உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் நிலுவையாக உள்ளது என்பதை அறிவிக்கலாம்.

27. மத்தியபிரதேச மாநிலம் சார்பாக முன்வைக்கப்பட்ட வாதங்களை ஏற்றுக்கொள்ளுதல் மேம்போக்காக இருக்கும், உண்மையிலேயே, எங்கெல்லாம் தேர்தல் நிலுவையாக உள்ளதோ/ மிக நிலுவையாக உள்ளதோ அந்த சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திற்கு தேர்தல் நடைமுறையை வேகப்படுத்தவும் மற்றும் "அனைத்து அம்சங்களிலும்" மாநில அரசின் மும்முறை தேர்தல் நடைமுறை நிறைவேற்றப்படும் வரை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டினை வழங்காமல் (ஆனால் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான அரசமைப்பின் ஒதுக்கீட்டிற்கு வரையறுத்து) தேர்தல் நடவடிக்கையை விரைவுபடுத்தும்படியான மாநில தேர்தல் ஆணையத்திற்கு இந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தொடர் உத்தரவுகள் மீறப்பட்டுள்ளன. மும்முறை தேர்தல் நடைமுறைகள் எப்பொழுதெல்லாம் முடிக்கப்படுகிறதோ அதற்கு பின்னர் நடைபெறவுள்ள எதிர்காலத் தேர்தல்கள் கணக்கிடப்படும். அரசமைப்பு வலியுறுத்தலை கருத்தில் கொண்டு, ஏற்கனவே நிலுவையில் இருந்த தேர்தல்கள் அதன் காரணமாக தாமதிக்கப்பட கூடாது.

28. சில நீதிப்பேராணை மனுக்கள் உயர்நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளதாகவும், அதில் இடைக்கால உத்தரவுகள்

பிறப்பிக்கப்பட்டுள்ளதகவும் மற்றும் தேர்தல் அட்டவணையை அறிவிப்பது மாநில தேர்தல் ஆணையத்தின் கடமையாகும் என்றும், மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையம் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் எங்கள் முன் வாதுரைத்தார். இது தொடர்பாக, சம்பத்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தாலோ அல்லது உரிமையியல் நீதிமன்றத்தாலோ நேர்விற்கேற்ப, வழங்கப்பட்ட உத்தரவால் பாதிப்படையாமல், மாநில தேர்தல் ஆணையம் அந்த உத்தரவுகளுக்கு அதன் கருத்துக்களுக்கும் கட்டுப்பட வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாக்குகிறோம். இனி மத்தியபிரதேச உயர்நீதிமன்றத்தாலோ அல்லது உரிமையியல் நீதிமன்றத்தாலோ இதன் பின்னர் பிறப்பிக்கப்படும் அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஏதேனும் இருப்பின் அது இந்நீதிமன்றத்தின் உத்தரவுகளுடன் முரண்பட்டு இருந்தால் அது சின்ஹா உத்தரவின் மூலம் நீக்கறவு செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டும். இந்நீதிமன்றத்தின் முன் அனுமதியின்றி செயல்படுத்தப்படக் கூடாது.

29. கற்றறிந்த அரசு தலைமை வழக்குரைஞர், திரு. துஷார் மேத்தா அவர்களின் வேண்டுறுத்தலின்படி, மாநில தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் பதிவுருக்கள் மூலம் வழங்கியுள்ளோம். மேலும் இந்த வழக்கு நடவடிக்ககைளின் விளைவிற்கு உட்பட்டு இந்த தீர்ப்புரையில் வரையறுக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், நாங்கள் மாநில அரசையும் சேர்க்கலாம்.

30. 2022 திருத்த சட்டங்(கள்)ன் படி, மாநில அரசால் எல்லை வரையறை செய்யப்படாவிட்டாலோ அல்லது இதர பிறப்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கீடு வழங்குவதற்காக மும்முறை தேர்தல் தேவைக்கான "அனைத்து அம்சங்களும்" நிறைவேற்றப்படாவிட்டால், வரவிருக்கும் உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களில் மாநில தேர்தல் ஆணையம் காலக்கெடு முடிவடைவதற்கு முன்பு இந்த உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் தெளிவுபடுத்துகிறோம்.

31. இந்த தீர்ப்பாணை மற்றும் உத்தரவுகள் மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையம்/மத்தியபிரதேச மாநில அரசு ஆகியவற்றிற்கு மட்டுமே வரையறுக்கப்படாமல், 04.05.2022-இல் வழங்கப்பட்ட அது போன்ற தீர்ப்புரைகளின் வரையறைகளின்படி மகாராஷ்டிரா தேர்தல் ஆணையம்.மகாராஷ்டிரா அரசுக்கு மட்டுமல்லாது, அரசமைப்பு வலியுறுத்தலை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து மாநில அரசு/யூனியன் பிரதேசங்கள் மற்றும் தொடர்புடைய தேர்தல் ஆணையங்கள் அதை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்பதையும் நாங்கள் தெளிவாக்குகிறோம்.

32. சி.அ.ம.(உ) எண்.19756/2021 உடன் விசாரிக்கும்படி இவ்வழக்கு 12.07.2022 அன்று பட்டியலிடப்படவேண்டும்.

33. நிறைவேற்றிய அறிக்கையை மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையம் உரிய காலத்தில் இணக்க அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

34. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மாற்றம் தொடர்பாக தேர்தல் அட்டவணையை எடுத்துக்கொள்வதில் எந்தத் தடையுமில்லை என்பதை உறுதி செய்வதில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால், திரும்பப்பெறக்கூடிய தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க மத்தியபிரதேச மாநில தேர்தல் ஆணையத்திற்கு உரிமை வழங்கப்படுகிறது.

உத்தரவு வழங்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."